RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்-14 14 ஜனவரி செவ்வாய்க்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# பொங்கல் பண்டிகை: தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து

சென்னை, ஜன.14

பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, செல்வப்பெருந்தகை, வைகோ உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது பொங்கல் வாழ்த் துகளை தெரிவித்து வருகின்றனர்.

**செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்):** தமிழ்நாட்டில் பொங்கல் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. மற்ற விழாக்களை விட பொங்கல் பண்டிகைக்கென தனிச் சிறப்பு உண்டு. தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் சிறப்பாக கொண்டாடி மகிழ்கிறார்கள்.

'உழவே தலை" என உழைக்கும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நாம். மண்ணையே குணத்தால் பிரித்து நிலத்தைப் போற்றிய மக்கள் நம் முன்னோர்கள். மனிதன் மட்டுமல்ல, மற்ற உயிரினத்தையும் தன்னோடு இணைத்து வாழ்ந்த சமூகம் நம்முடையது. இனம், மண், மக்கள், விளைச்சல், உணவு இவை அனைத்துக்கும் சேர்த்துக் கொண்டாடும் ஒற்றை விழாதான் பொங்கல் பெருவிழா. வருகிற பொங்கல் திருநாளை தமிழ் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் கொண்டாடி, அனைத்து உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கிப் பரவ வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரா.முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்)** : உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழ் சமூகம் உழைப்பைப் போற்றும் உன்னத திருநாளாக தை முதல் நாளை வழி, வழியாக கொண்டாடி வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்துறை தமிழறிஞர் ஒன்று கூடி, "தை முதல் நாள் தான் தமிழ் புத்தாண்டு" என ஆய்ந்தறிந்து அறிவித்ததை ஏற்று, தமிழ் புத்தாண்டாகவும் கொண்டாடப்படுகிறது.

இருநூறு ஆண்டுகள் தொடர்ந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் முன்னோர்கள் வளர்த்து வழங்கிய "வேற்றுமையில் ஒற்றுமை" நல் மரபையும், மதச்சார்பற்ற பண்பையும் அடித்தளமாக கொண்டு இயங்கி வரும் அரசியலமைப்பு சட்டத்தை சிதைத்து, அழித்தொழித்து விட்டு, அந்த இடத்தில், வழக்கொழிந்து போகும் "மனுதர்ம" விதிமுறைகளை மீண்டும் நடைமுறைப்படுத்த ஆர்எஸ்எஸ் பரிவார் கும்பல்கள் வெறி பிடித்து அலைகின்றன. சமய வேறுபாடுகளையும், சனாதனக் கருத்தியலால் கட்டமைக்கப்பட்ட படிநிலை சாதிய சமூக வேறுபாடுகளையும் பயன்படுத்தி, மதவெறி ஆதிக்க சக்திகள் அரசியல் அதிகாரத்தில் தொடரும் பேராபத்தை உணர்ந்து, அதனை அதிகாரத்திலிருந்தும், சமூக வாழ்வில் இருந்தும் வெளியேற்ற தைத் திருநாளில் உறுதி ஏற்போம்.

**வைகோ (மதிமுக)**: 'உலகத் தாருக்கே அச்சாணி' என வள்ளுவப் பெருந்தகையால் வருணிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வில் எண்ணற்ற இன்னல்கள் சூழ்ந்து விட்டன. நீர்நிலைகள், ஏரி, குளங்கள் காணாமல் போய்விட்டன. நீர் வரத்து பாதிக்கப்பட்டு விட்டது. இந்தத் துயரத்தில் இருந்து விவசாயிகள் விடுபட வேண்டும். காவிரி உள்ளிட்ட தமிழகத்தின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் விவசாயிகள், மகளிர், மாணவர் அனைவர் நலனையும் காக்கின்ற தொலை நோக்குப் பார்வையோடு முதல்வர் ஸ்டாலின் இந்தியாவின் பிற மாநிலங்கள் எலலாம் தமிழ்நாட்டைப் பின்பற்றுகின்ற வகையில் திராவிட மாடல் ஆட்சியில் பொன் முத்திரையை பதித்து வருகிறார். இந்துத்துவா சக்திகளையும், சனாதனக் கூட்டங்களையும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் பூமியில் அடியோடு முறியடிப்போம். உலகம் முழுமையும் கொண்டாடி மகிழ்கின்ற தமிழ்க்குடி மக்கள், ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இனிய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



**ராமதாஸ் (பாமக நிறுவனர்):** உல கெங்கும் வாழும் தமிழர்களின் அறுவடைத் திருநாளான தைப்பொங்கல் விழாவையும் தமிழ் புத்தாண்டையும் கொண்டாடும் தமிழ்ச் சொந்தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகில் இயற்கையை கொண்டாடும் ஒரே இனம் தமிழினம் தான். வாழ்க்கைக்கும், முன்னேற்றத்திற்கும் உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் இனமும் தமிழினம் தான். தமிழ்நாட்டை பீடித்திருக்கும் அனைத்து தீமைகளும் விலக வேண்டும். அனைவரின் துயரங்களும் தீர வேண்டும்; நாட்டில் நலம், வளம், நன்மை, அமைதி, மகிழ்ச்சி, சகோதரத்துவம், சமூகநீதி ஆகியவை செழிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக, தமிழர்களின் வாழ்க்கையில் தைத்திருநாளும், தமிழ்ப் புத்தாண்டும் எல்லா நன்மைகளையும் வழங்கட்டும் என்று கூறி மீண்டும் ஒருமுறை வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கி.வீரமணி (திராவிடர் கழகம்):** உழைப்பின் அறுவடைத் திருநாளான பொங்கல் விழா மட்டுமல்ல; உண்மையான தமிழ்ப் புத்தாண்டு தொடக்கமும் ஆகும். பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி தழைத்தோங்கும் தமிழர்தம் புத்தாக்கமாகவும் இவ்வாண்டு அமையட்டும். அனைவருக்கும் புத்தாண்டு - பொங்கல் வாழ்த்துகள்.

**ஓபிஎஸ்**

தமிழ்ப் பண்பாட்டை உலகிற்கு உணர்த்தும் விழாவாக, பயிர் விளையக் காரணமாயிருந்த பகவலனுக்கு நன்றி செலுத்தும் விழாவாக பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருநாள் தமிழர்களின் நன்றி மறவா பண்பினை உலகுக்கு உணர்த்தும் திருநாள். தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். இதற்கேற்ப தமிழ்நாட்டு மக்களுக்கு வழி பிறக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இல்லங்கள் தோறும் பொங்கட்டும் பொங்கல், இதயங்கள் தோறும் தங்கட்டும் இன்பங்கள் என்று வாழ்த்தி, அனைவருக்கும் எனது பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

# இதுவரை 24 பேரை பலிகொண்ட லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீ உருவானதும் பரவியதும் எப்படி?

லாஸ்ஏஞ்சல்ஸ், ஜன.14

அமெரிக்காவின் கலிபோர் னியா மாகாணம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பாலிசேட்ஸ் பகுதியில் கடந்த 7ம் தேதி காட்டுத் தீ ஏற்பட்டது. இந்த காட்டுத் தீ மளமளவென 50,000 ஏக்கர் அளவுக்கு பரவி உள்ளது. இதில் சுமார் 40,000 ஏக்கர் பரப்பளவு முழுமையாக தீயில் எரிந்திருக்கிறது. சுமார் 7,500 தீய ணைப்பு வீரர்கள், ஏராளமான ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மூலம் தீயை அணைக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தண்ணீர் பற்றாக்குறை, தீயணைப்பு வீரர்கள் பற்றாக்குறை, காற்றின் வேகம் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் தீயை அணைக்கும் பணிகளில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. காட்டுத் தீயால் லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர். பலரை காணவில்லை. ஏராளமானோர் தீக்காயம் அடைந்துள்ளனர். சுமார் 4 லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர்.

ஒரு வாரமாகியும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடிய வில்லை. இதுகுறித்து லாஸ் ஏஞ்சல்ஸ் அதிகாரிகள் வட்டா ரங்கள் கூறியது: லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மலை சார்ந்த பகுதியாகும். இந்த மலைப் பகுதிகளில் வீடுகள் இல்லாத நடோடிகள் பலர் வசிக்கின்றனர். தற்போது குளிர் காலம் என்ப தால் அவர்களில் யாராவது வெப்பத் துக்காக தீமூட்டி இருக்கலாம். அந்த தீ காட்டுத் தீயாக பரவியிருக்கலாம் என்று சந்தேகிக் கிறோம் என்றனர்.

# மகா கும்பமேளா: திரிவேணி சங்கமத்தில் புனித நீராட திரண்ட பக்தர்கள்!

பிரயாக்ராஜ், ஜன.14

12 ஆண்டுக்குப் பிறகு நடைபெறும் மகா கும்பமேளா விழா உலகின் மிகப்பெரிய மத திருவிழா ஆகும். பிப்ரவரி 26ம் தேதி வரை நடைபெறும் இவ்விழாவில் இந்தியா மட்டுமல்லாது, உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 45 கோடி பேர் இதில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று பவுர்ணமி என்பதால் கங்கை, யமுனை, சரஸ்வதி நிதிகள் சங்கமிக்கும் இடத்தில் பக்தர்கள் புனித நீராட அதிகளவில் திரண்டுள்ளனர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பக்தர்கள், சாதுக்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் இந்த பங்கேற்கும் வகையில் அங்கு முகாமிட்டுள்ளனர். நாளை மகர சங்கராந்தி என்பதால் இந்த நிகழ்வின் முதல் அமிர்த கால நீராடல் நடைபெற உள்ளது. திரிவேணி சங்கமத்தில் நீராடுவது பாக் கியம் என்றும், பகவான் ராமர் கூட இங்கு வந்து நீராடி உள்ள தாக ஐதீகம் சொல்கிறது என பண்டிதர் பவன் குமார் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பக்தர்கள் கருத்து தெரிவித்துள் ளனர்.



பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி? முன்னதாக, உத்தரபிரதேச முதல் யோகி ஆதித்யநாத் வழங்கிய உத்தரவின் படி பிரயாக்ராஜ் நகரில் உள்ள கோயில்கள், அகாராக்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில காவல்துறை தலைவர் (டிஜிபி) பிரசாந்த் குமார் தெரிவித்துள்ளார். பிரயாக்ராஜ் நகரை இணைக் கும் 7 முக்கிய வழித் தடங்க ளில் 102 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட் டுள்ளன.

கண்காணிப்பை பலப்படுத்துவதற்காக, 5 வஜ்ரா வாகனங்கள், 10 ட்ரோன்கள் மற்றும் சதித் திட்டங்களை முறியடிக்கும் 4 குழுக்கள் 24 மணி நேரமும் ரோந்து பணியில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன.

நீருக்கடியில் செயல்படும் 113 ட்ரோன்கள், 2,700 செயற்கை நுண்ணறிவு (ஏஐ) கேமராக் கள் உட்பட நவீன தொழில் நுட்பங்களும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மாநில போலீஸாருடன் தேசிய பாதுகாப்புப் படையினர் (என் எஸ்ஜி), தீவிரவாத தடுப்புப் படையினர் (ஏடிஎஸ்) உள்ளிட் டோரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர்.

ஜனவரி 14 (மகர சங்கராந்தி), 29 (மவுனி அமாவாசை) மற்றும் பிப்ரவரி 3 (வசந்த பஞ்சமி) ஆகிய 3 தினங்கள் புனித நீராடலுக்கான சிறப்பு தினங்கள் ஆகும். இந்த நாட்களில் கூட்டம் வழக்கத்தைவிட அதிக மாக இருக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

# 3186 காவல்துறை, சீருடை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள்: முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஜன.14

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள செய்திக் குறிப்பில், "தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர் நிலை 2, காவலர் நிலை 1, தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3000 பணியாளர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள்" வழங்க முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர், இயந்திர கம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி (தரம் உயர்த்தப்பட்ட இயந்திர கம்மியர் ஓட்டி) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப் பட்ட முன்னணி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 120 அலுவலர்களுக்கும். சிறைகள் மற்றும் சீர் திருத்தப் பணிகள் துறையில் முதல் நிலை வார்டர்கள் (ஆண்), இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (பெண்) நிலைகளில் 60 பேர்களுக்கும் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்" வழங்க முதல்வர் ஆணையிட் டுள்ளார். மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலைவேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி ரூ.400/, 2025 பிப்ரவரி 1ம் தேதி முதல் வழங்கப்படும்.




மேலும், காவல் வானொலி பிரிவு, மோப்ப நாய் படைப் பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணி யாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் வீதம், மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் தொழில் நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்" வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள். இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அவரவர்களின் நிலைகளுக்குத் தக்கவாறு ரொக்க தொகை வழங்கப்படும்.

மேற்கண்ட அனைவருக்கும் பின்னர் நடைபெறும் சிறப்பு பதக்க அணிவகுப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



* இதில் வரும்விளம்பரங்கள் குறித்த உண்மை தன்மைகளுக்கு நிர்வாகம் பொறுப்பாகாது

மாலை தந்தி



# மதுரை மாநகராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் புதிய பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் கே.என்.நேரு



மதுரை, ஜன.14

மதுரை மாநகராட்சி உத்தங்குடியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மதுரை வடக்கு, மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதிகளில் ரூ.471.89 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமையேற்றனர். மாநகர மேயர் இந்திராணி பொன்வசந்த் . நகராட்சி நிர்வாக இயக்குனர் .சிவராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் பேசியதாவது :

மதுரை மாநகராட்சி 2011 ஆம் ஆண்டு விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு 100 வார்டுகள் மற்றும் ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதில் பழைய 72 வார்டுகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு நடைமுறையில் இருந்து வருகிறது. புதிதாக இணைக்கப்பட்ட வார்டு பகுதிகளுக்கு பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதி இல்லாததால், இப்பகுதி பொதுமக்களின் அடிப்படை தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.307.78 கோடி மதிப்பீட்டில் வைகை வடகரை பகுதிகளில் உள்ள புதிதாக இணைக்கப்பட்ட வார்டு எண்கள்.1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 11, 13, 15, 17, 18, 19, 20, 33, 34, 37, 38, 39 மற்றம் 40 ஆகிய 22 வார்டுகளில் 360.49 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய் அமைத்தல், 14905 எண்ணம் வீட்டு இணைப்பு வழங்குதல் மற்றும் புதிதாக 3 எண்ணம் கழிவுநீரேற்று நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், துணை மேயர் தி.நாகராஜன், இணை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை வெற்றிச்செல்வன், மண்டலத் தலைவர்கள் வாசுகி, சரவண புவனேஸ்வரி, . பாண்டிச்செல்வி, முகேஷ்சர்மா, சுவிதா, தலைமை பொறியாளர் .ரூபன்சுரேஷ், மக்கள் தொடர்பு அலுவலர்கள் சாலிதளபதி, மகேஸ்வரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் கயிலை செல்வம், உதவி ஆணையாளர்கள், செயற் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# போகிப்பண்டிகை 2025: சென்னை விமான நிலையத்தை சூழ்ந்த புகைமூட்டம்: விமானங்களின் நேரம் மாற்றம்!



சென்னை, ஜன.14

போகிப் பண்டிகை கொண்டாடப்படுவதால் புகை மூட்டம் மற்றும் பனிமூட்டம் காரணமாக சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்படலாம் என எதிர்பார்த்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையில் இருந்து புறப்பாடு மற்றும் வருகை என 30 விமானங்களின் நேரங்கள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

## கடுமையான புகைமூட்டம்

அதை போல் டெல்லி, பெங்களூரில் இருந்து இன்று அதிகாலை சென்னை வர வேண்டிய 3 பயணிகள் விமானங்கள் இதன் காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. சென்னை விமான நிலையத்தை சுற்றியுள்ள மீனம்பாக்கம் கவுல்பசார், பொழிச்சலூர், பம்மல், அனகாபுத்தூர், தரைப்பாக்கம், மணப்பாக்கம் குடியிருப்பு பகுதிகளில் போகிப் பண்டிகையையொட்டி, பழைய பிளாஸ்டிக் கழிவுகள், டயர்கள் போன்றவைகளை தெருக்களில் போட்டு எரிப்பதால், கடுமையான புகைமூட்டம் ஏற்பட்டு, சென்னை விமான நிலைய ஓடுபாதை பகுதிகள் சூழ்ந்து கொள்கின்றன. அதோடு பனிமூட்டமும் இருப்பதால், ஓடு பாதையே தெரியாத அளவு, அடர்த்தியான புகை பனிமண்டலம் ஏற்படுகிறது.

இதனால் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. சென்னை விமான நிலையத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு, 73 புறப்பாடு விமானங்கள், 45 வருகை விமானங்கள் மொத்தம் 118 விமான சேவைகள், போகி பண்டிகை புகை மூட்டத்தால் பாதிக்கப்பட்டன. அதன் பின்பு ஒவ்வொரு ஆண்டும் விமான சேவைகள் பாதிப்பு படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த 2024 ஆம் ஆண்டு, போகி பண்டிகை புகைமூட்டம் மற்றும் பனிமூட்டம் காரணமாக, 27 வருகை விமானங்கள், 24 புறப்படு விமானங்கள், 51 விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

## இந்திய விமான நிலைய ஆணையம்

இந்த ஆண்டு போகி பண்டிகையின் போதும், அதைப் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம் என்று கருதி, இந்திய விமான நிலைய ஆணையம், போகி பண்டிகையான இன்று காலை, சென்னைக்கு வரும் விமானங்கள், இங்கிருந்து புறப்படும் விமானங்கள், போன்றவைகளின் நேரங்களை மாற்றி அமைத்துள்ளது.

புகை மற்றும் பனிமூட்டம் மேலும் அதிகமானால், சென்னைக்கு வரும் விமானங்களை, வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பவும் தயார் நிலையில் ஏற்பாடுகளுடன் இருக்கின்றனர். ஆனால் இன்று காலை 6 மணி வரை, சென்னை விமான நிலையத்தில், பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இல்லை.

அதன்படி சென்னையில் இருந்து நேற்று காலை, துபாய், அபுதாபி, தோகா, மஸ்கட், சிங்கப்பூர், கோலாலம்பூர், டெல்லி, மும்பை, பெங்களூர், அந்தமான், கோவா, புனே, கொல்கத்தா உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வருகை, புறப்பாடு விமானங்கள் நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்டு, அது குறித்து பயணிகளுக்கு குறுஞ் செய்திகள் மூலம் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அதோடு டெல்லி மற்றும் பெங்களூரில் இருந்து, சென்னைக்கு வர வேண்டிய 3 இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானங்கள், இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள், தொடர்ந்து நிலைமையை கண்காணித்து கொண்டு வருகின்றனர்.

# சிட்லபாக்கத்தில் தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை இயக்கம் சார்பாக மின்னனு கழிவுகள் குறித்த விழிப்புணர்வு பேரணி





சிட்லபாக்கம் ஜன.13

சிட்லபாக்கத்தில் தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை இயக்கம் சார்பாக மின்னனு கழிவுகள் சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்பி வைத்தல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் சிட்லபாக்கத்தில் தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை இயக்கம் சார்பாக தலைவர் கே.பாஸ்கரன் தலைமையில் சிட்லபாக்கத்தில் நடைபெற்ற மின்னணு கழிவுகள் சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்பி வைத்தல் மற்றும் கல்லூரி மாணவர்கள் விஐடி சென்னை பேராசிரியர் டாக்டர் வாசுகி, மெட்ராஸ் யூனிவர்சிட்டி டாக்டர் பிரகாஷ், ராமச்சந்திரா மருத்துவ கல்லூரி மருத்துவமனை டாக்டர், சவிதா கல்லூரியில் டாக்டர் அவர்களின் தலைமையிலும் சுமார் 150 மாணவர்கள் பாதகை ஏந்தி பொதுமக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டனர் இறுதியாக அனைவருக்கும் 300 மீண்டும் மஞ்சள் பை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் மூலம் பிளாஸ்டிக் பை உபயோகப்படுத்துவதை தடுக்கும் முடியும் என்பதையும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தலைமை ஏற்று நடத்தி வைத்தார் அதிமுக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட சிட்லபாக்கம் ராஜேந்திரன் கலந்துகொண்டு நிகழ்ச்சி துவங்கி வைத்தனர் இதில் சங்கத்தின் சார்பாக சி.எஸ்.ராஜன், துணைத் தலைவர் பழனிச்சாமி, செயலாளர், தியாகராஜன், இணைச் செயலாளர் சுரேஷ், மனோகரன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்விற்கு ஆதரவு தருவதற்கு பெருமளவில் லயன் சங்கத்தின் மாவட்டத் ஆளுநர் 324 ஜே ஏ.டி.ரவிச்சந்திரன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது..

# பி.புத்தூர் கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு போராட்டத்தில் ஈடுபட போவதாக பொதுமக்கள் ஆவேசம்



இராமநாதபுரம் ஜன.14

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஊராட்சி ஒன்றியம் பி.புத்தூர் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் முழுமையக விவசாய தொழில் செய்து வருகின்றனர் இந்த கிராமத்தில் நெல்டூர் கூட்டுகுடிநீர் திட்டத்தின் கீழும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் வாரம் ஒரு நாள் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது.

கடந்த இரண்டு மாதங்களாக எந்த ஒரு குடிநீரும் வருவதில்லை எனவும், குடிநீருக்காக மிகவும் சிரமப்படுவதாகவும், இது தொடர்பாக குடிநீர் வழங்கள் உதவி பொறியாளரிடம் பேசியதில் அவர் சரியான பதில் அளிப்பதில்லை என்றும், குடிநீர் வழங்க கேட்டு சாலை மறியலில் ஈடுபட போவதாகவும் பி.புத்தூர் கிராம பொதுமக்கள் தெரிவித்தனர்.

# மதுரை அகில பாரத ஐயப்பா சேவா சங்கம் சார்பில் 50 நாட்களாக நடைபெற்ற அன்னதானம் நிறைவு விழா



மதுரை ஜன.14

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மற்றும் மதுரை மாவட்ட அகில பாரத ஐயப்பா சேவா சங்கம் சார்பாக கடந்த நவம்பர் 22 ஆம் தேதி முதல் கோவில் வளாகத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

அகில பாரத ஐயப்ப சேவா சங்க தமிழ் மாநில தலைவர் எம் விஸ்வநாதன் தலைமையில் கோவில் அறங்காவலர் குழு தலைவர் சத்யபிரியா அன்ன தானத்தை அன்று தொடங்கி வைத்தார் அறங்காவலர் குழு உறுப்பினர் மணி செல்வம், பொம்ம தேவன், சண்முகசுந்தரம், ராமையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தினமும் காலையில் ஆயிரம் பேருக்கு கேசரி, இட்லி, பொங்கல், தக்காளி சாதம் வழங்கப்பட்டது.கடந்த 50 நாட்களாக வழங்கப்பட்ட அன்ன தானம் நிறைவு விழா இன்று நடைபெற்றது.

துணை ஆணையர் சூரிய நாராயணன் அறங்காவலர் குழு உறுப்பினர் பொம்ம தேவன் அன்னதானத்தை துவக்கி வைத்தனர் இந்நிகழ்வில் கோவில் அலுவலர்கள் அறங்காவலர்கள், சேவா சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் அன்னதானத் திற்கான ஏற்பாடுகளை மதுரை மாவட்ட தலைவர் குருசாமி செயலாளர் பாலமுருகன் துணைத்தலைவர் மனோகரன் உப தலைவர் சுப்பையா மற்றும் கிளை நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர் உபயதாரர்கள்,சேவை செய்த தொண்டர்கள், சமையல் காரர்கள், அன்னதான கமிட்டி சார்பில் கெளரவிக்கப்பட்டனர். அன்னதானம் நிறைவு முன்னிட்டு அல்வா, பூரிகிச்சடி இட்லி பொங்கல் வழங்கப்பட்டது.

# செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தலைமை தமிழக வெற்றி கழகம் சார்பில் பொங்கல் தொகுப்பு பை, மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி







பொழிச்சலூர் ஜன14

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி தலைமை தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு பை வழங்கும் நிகழ்ச்சி

மாவட்ட தலைமை ஜெ.மணி, ஜெயமோகன், மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு எஸ்.ஜான் ஆகியோர் தலைமை ஏற்பாட்டில் நடைபெற்றது

நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட பொருளாளர் விஜய் தியாகு, பங்கேற்று 500 பொது மக்களுக்கு முழு கரும்புடன்,பொங்கல் தொகுப்பு பை, மற்றும் அறுசுவை உணவு மற்றும் 200 மாணவ மாணவிகளுக்கு, நோட்டுப் புத்தகம், ஆகியவை வழங்கி சிறப்பித்தனர்,

உடன் நிகழ்ச்சியில், பல்லாவரம் தொகுதி தலைவர் சுறா ரவி பல்லாவரம் தொகுதி துணைத் தலைவர் பார்த்திபன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு சுந்தர், அனகாபுத்தூர் பகுதி தலைமை மதன் மகளிர் அணி தலைமை ஐஸ்வர்யா மதன், ஒன்றிய செயலாளர் மணிகண்டன், பொழிச்சலூர் பகுதியில் பொருளாளர் சந்துரு பல்லாவரம் தொகுதி வழக்கறிஞர் பிரிவு ரெபேக்கா மகளிர் அணி இந்துமதி, துர்கேஷ் நந்தினி, மற்றும் வினோத்குமார் பிரதீப், கேஎஸ்ஆர்.சுரேஷ் ணிஷிபி, அருன், சுந்தர், விஜய், மற் றும் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றியம் பகுதி தொகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி திமுக சார்பில் உதயநிதி உதய நாள் விழா முன்னிட்டு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பரிசு





சோழிங்கநல்லூர் ஜன14

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி உதய நாள் விழா முன்னிட்டு மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நவம்பர் 27 முதல் டிசம்பர் 27 வரை மாதம் முழுவதும் பிறந்த 47 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து ஊட்டச்சத்து பெட்டகம் வழங்குதல் நிகழ்ச்சி காலை 10 மணிக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜே.இ.பாண்டியன் தலைமையில் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் இதுபோன்ற விழா நடத்தும் நோக்கம் மக்களுக்கு நலத்திட்டங்கள் உதவிகளை வழங்கி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி தான் உதயநிதியின் உதய நாள் விழா என்று சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் திமுக அரசின் சாதனைகளை விளக்கி உரையாற்றினார். வரவேற்புரையாக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ, தலைமை பொதுக் குழு உறுப்பினர், ஒன்றிய கவுன்சிலரமான ப.ரவி, ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரதிராஜன், மாவட்ட கவுன்சிலர் என். வேதகிரி, ஒன்றிய கவுன்சிலர் கல்பனா சுரேஷ்,மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் மு. மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, ஆர். கிருஷ்ண குமார், ச. சங்கர்கணேஷ், கா. வீ. தியாகராஜன், செ. ரவி, எஸ். பிரகாஷ், வேங்கை வாசல் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயச்சந்திரன், 198வது வட்டச் செயலாளர் பா. தேவ குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஜெ.டி.மனுநீதி, எச்.டி .போஸ், ஒன்றிய பொருளாளர் த.டில்லிபாபு, மாவட்ட பிரதிநிதிகள் கே.குமார், ஆர்.சொக்கலிங்கம், ஜி. எம்.ஏழுமலை, முன்னாள் பொதுகுழு உறுப்பினர் எம். பி. மூர்த்தி, மே.ஊ.ம.து. தலைவர் எஸ்.கோபு, புனித தோமையார் மலை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஓ.கே.எஸ்.சதீஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் கே. சரவணன், இ.விஜய், என். புவனேஷ், சா.ராமதாஸ், ஆர். வெங்கடேசன், ஆர். எஸ். லோகேஸ்வரா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் என்.ஜி. ஓ, காலனி புது பெருங்களத்தூரில் 20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடியை தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி. வசந்தகுமாரி திறந்து வைத்தார் இதனைத்தொடர்ந்த 12 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடையினை தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்,ராஜா, எம்,எல்,ஏ திறந்து வைத்து பின்னர் பொங்கல் தொகுபினை பொதுமக்களுக்கு வழங்கினார் உடன் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி..காமராஜ் அவர்கள் உடனிருந்தார் மற்றும் 58வது மாமன்ற உறுப்பினர் திருமதி.மதுமிதா மதன், 58வது வட்ட செயலாளர் எஸ்.சேகர், 55வது மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, சேது மாதவன் மற்றும் வட்ட நிர்வாகிகள் பகுதியில் நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழகத் நிர்வாகிகள், நலச்சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் புதிய தொழிற் பள்ளிகள் துவங்க, புதுப்பிக்க விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல் ஜன.14

2025-2026 ஆம் கல்வியாண்டிற்கு புதிய தொழிற் பள்ளிகள் துவங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற் பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகிவற்றிற்கான விண்ணப்பங்கள் 02.01.2025 முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகின்றன.



20252026 ஆம் கல்வியாண்டிற்க்கு அங்கீகாரம் பெற ஒரு தொழிற்பள்ளி ஒரு இணைய தள விண்ணப்பம் சமர்ப்பித்தால் போதுமானது. விண்ணப்பிக்கவுள்ள அனைத்து தொழிற் பிரிவுகள் / கூடுதல் அலகுகளுக்கு தேவையான விவரங்கள் அனைத்தும் ஒரே விண்ணப்பத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணம் மற்றும் ஆய்வுக் கட்டணம் RTGS/NEFT மூலம் செலுத்த வேண்டும்.

அனைத்து தொழிற் பிரிவுகளுக்கும் சேர்த்து விண்ணப்ப கட்டணம் ரூ.5000/ மற்றும் ஆய்வுக் கட்டணம் ரூ.8000/ செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 29.02.2025. இதற்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் அங்கீகாரம் குறித்த தகவல் மற்றும் அறிவுரைகள் பெற www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம், Email ID: detischennai@gmail.com மற்றும் தொலைபேசி எண்: 04422501006, 04422501113 மூலம் தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழர் திருநாளாம் சமத்துவ பொங்கல் விழாகல்லூரி முதல்வர் முனைவர். எனோலா அருட்செல்வி பர்வதா தலைமையில்கொண்டாடப்பட்டது.கல்லூரி பேராசிரியர்கள், அலுவலக நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். முதல்வர் தமிழர் திருநாளின் சிறப்பம்சங்களை பற்றி எடுத்துரைத்தார். மாணவிகள் அனைவரும் துறைவாரியாக சமத்துவ பொங்கல் வைத்து பொங்கல் தினத்தை கொண்டாடினார்கள். ஒருவருக்கொருவர் பொங்கலை பரிமாறிக் கொண்டு பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தனர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.



தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது வட்டாட்சியர் முரளிதரன் தலைமையில் துணை வட்டாட்சியர்கள் வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் கிராம உதவியாளர் மற்றும் அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பாக கொண்டாடினார்கள்.

## பழனி நகர தலைமைதமிழக வெற்றி கழக சார்பாக பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா

பழனி ஜன13

திண்டுக்கல் மாவட்டம் பழனி தனியார் மஹாலில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பழனி நகர தமிழக வெற்றிக்கழக தலைமையின் சார்பாக கழகப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின்படி நகரத் தலைவர் விஜய் சிவா பாலமுருகன் விஜய் அன்பர் ஆகியோர் தலைமையில் பொங்கலோ பொங்கல்" என்று சொல்லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. தமிழர் தம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாக தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது.



இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை அனைத்து தரப்பு மக்களும் பொங்கலை சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழக வெற்றிகழகம் சார்பாக ஆயிரத்து ஐநூறு நபர்களுக்கு ஒரு கிலோ அரிசி. முழுகரும்பு. பாசிப் பருப்பு. வெள்ளம்.முந்திரிப் பருப்பு. கிறிஸ்மஸ் பழம். ஏலக்காய். வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது மற்றும் இந்நிகழ்வில் பழனி நகர ஒன்றிய இளைஞரணி தொண்டர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## திண்டுக்கல்லில் மாநில கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு பசுமை எரிசக்திக்கழகம் நிர்வாக இயக்குநர் ஆய்வு

திண்டுக்கல் ஜன.14

திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக, மாநில கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் நிருவாக இயக்குநர் மரு. அனீஸ் சேகர் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ. நா.பூங்கொடி, முன்னிலையில் அனைத்து துறை உயர்மட்ட அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.




இக்கூட்டத்தில், குடிநீர் திட்டங்கள், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், முதல்வரின் முகவரி திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள், வழகிழக்கு பருவ மழை, பட்டா வழங்கப்பட்ட விபரங்கள், கலைஞரின் கனவு இல்லம், ஊரக வீடுகள் சீரமைப்புத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், முதலமைச் சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், பள்ளிக் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டம், நான் முதல்வன் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்துதுறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், மாங்கரை ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுமான பணிகள், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், மாங்கரை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட புதிய பாலம், காப்பிளியப்பட்டியில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுமான பணிகள், கே.புதுக்கோட்டையில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மரக்கன்றுகள் வளர்ப்பு கூடாரம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ரெட்டியபட்டி ஊராட்சியில் பெஞ்ஜால் புயல் மழையால் பயிர்கள் பாதிக்கப் பட்ட இடங்கள், தங்கச்சியம்மாபட்டியில் உலர்களம் ஆகியவற்றை மாநில கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் நிருவாக இயக்குநர் மருத்துவர் மரு.அனீஸ் சேகர், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் பெ.திலகவதி, பழனி சார் ஆட்சியர் சீ.கிஷன் குமார்., திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர்.இரா.சக்திவேல், கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் திரு.பி.சிவராம், மாநகராட்சி ஆணையாளர் .இரா.ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) . மு.கோட்டைக் குமார், துணை ஆட்சியர்(பயிற்சி) செல்வி ராஜேஸ்வரிசுவி, வேணாண்மைத்துறை இணை இயக்குநர்.ஏ.பாண்டியன், வேளாண்மை துணை இயக்குநர்.ஏ.காளிமுத்து, உதவி இயக்குநர் சந்திரமாலா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). ஐ.நாகராஜன், பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் பாண்டியராஜன், செயற்பொறியாளர் சக்திமுருகன், சுகாதாரத் துறை துணை இயக்குநர் மரு.அனிதா, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் .பழனிச்சாமி மற்றும் துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## மானாமதுரை தனியார் பள்ளியில் பொங்கல் தின சிறப்பு விளையாட்டு போட்டிகள் மாணவர்கள் உற்சாகம்

மானாமதுரை ஜன14

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பாபா மெட்ரிக் பள்ளியில் சமத்துவப் பொங்கல் நேற்று நடைபெற்றது. மாணவர்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரியமான உடைகளில் மாணவர்கள் பள்ளிக்கு வந்தனர்.பாரம்பரிய நடனங்களான கரகாட்டம், ஒயிலாட்டம்,கோலாட்டம், நாட்டுப்புறபாடல்,கும்மியாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.




உழவர் தினத்தின் சிறப்புகளைப் பற்றி உழவர் வேடமணிந்து விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும் மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

திருவள்ளுவர் தினத்தை எடுத்துரைக்கும் வகையில் மாணவர்கள் திருவள்ளுவர் வேடமணிந்து திருக்குறள் ஒப்புவித்தலும் மற்றும் திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு பற்றியும் மாணவர்கள் உரையாற்றினார். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கயிறு இழுத்தல்,உறியடித்தல் மற்றும் சில விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர்கள் உற்சாகத்துடன் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றனர்.

விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் நிறுவனர் ராஜேஸ்வரி பரிசுகள் வழங்கினார். பள்ளியின் தாளாளர் கபிலன் தலைமை வகித்தார்.

பள்ளியின் நிர்வாகி மீனாட்சி முன்னிலை வகித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதல்வர் சாரதா ஏற்பாடு செய்திருந்தார்.

## தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, ஜன.14

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 95 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.



இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டு மனைப் பட்டா, வேலை வாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 95 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 2023 ஆம் ஆண்டிற்கான சிங்காரவேலர் விருது பெற்ற தேனி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் சுப்பிரமணி அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.


அதனைத் தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பில் தலா ரூ. 4700/ மதிப்பிலான செயற்கை கால்கள் 2 நபர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன், துணை ஆட்சியர் (பயிற்சி) டினு அரவிந்த், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் வெங்கடாச்சலம், தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் இளங்கோ மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் செந்துறை வட்டங்களை சேர்ந்த சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் தேனி வளர்ப்பு பெட்டி

திண்டுக்கல், ஜன.14

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நத்தம் மற்றும் செந்துறை வட்டங்களை சேர்ந்த சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலான தேனி வளர்ப்பு பெட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, இன்று (13.01.2025) வழங்கினார்.



மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்ததாவது:

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் தேனி வளர்ப்பு தொகுப்பு திட்டத்தின்கீழ் இரண்டு வட்டாராத்தில் தேனி வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் நத்தம் வட்டம், செந்துறை, வடமதுரை வட்டம், கொம்பேறிபட்டி கிராமத்தில் தேனி வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டு, ஒரு வட்டாரத்திற்கு 20 சுய உதவிப் பெண்கள் வீதம் இரண்டு வட்டாரத்திற்கு 40 பெண்களை தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒரு வட்டாரத்திற்கு தேனி தொகுப்பிற்கு சுழல் நிதியாக ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தேனி வளர்ப்பு தொகுப்பில் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஒரு நபருக்கு 5 தேனி பெட்டிகள் வீதம் 40 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு 200 தேனி பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. கிராம பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு இத்திட்டம் முன்னோடி திட்டமாக அமைந்துள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் மொ. நா.பூங்கொடி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சதீஸ்பாபு, மாவட்ட வள பயிற்றுனர் எஸ்.குமார் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

14.01.2025

# வேலூரில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அரசு பொருட்காட்சி திறப்பு விழா



வேலூர், ஜன.1

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கொணவட்டம் மாங்காய் மண்டி மைதானம், வேலூர் மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வேலூர் மாங்காய் மண்டி அருகில் உள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசு பொருட்காட்சியினை, மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில், சிறப்பு அழைப்பாளராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் (12.01.2025) கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர், 1வது மண்டல குழு தலைவர்கள் புஷ்பலதா வன்னியராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், வருவாய் கோட்டாட்சியர்கள் பாலசுப்பிரமணியன், செல்வி சுபலட்சுமி,வேலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் த.ஜெ.ராஜபிரகாஷ், மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் பணியாளர்கள் ஒப்பந்ததாரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொழிச்சலூர் பகுதி த.வெ.க சார்பில் 500 நபர்களுக்கு முழு கரும்புடன் பொங்கல் தொகுப்பு



பொழிச்சலூர் ஜன14

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பொழிச்சலூர் பகுதி தலைமை தமிழக வெற்றி கழகம் சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு பை வழங்கும் நிகழ்ச்சி பொழிச்சலூர் பகுதி தலைவர் ஆர். மணிகண்டன் தலைமையில் பொழிச்சலூர் பகுதி தவெக நிர்வாகிகள், தமிழரசன், தினேஷ், சாலமன், பாலாஜி நரேன், விஜய், கணேஷ், கஸ்பர் ராஜா, பொற்செழியின், சதீஷ், அரவிந்த், கணேஷ், சஜீலா, செல்வம், மற்றும் ஷாம் ஆகியோர் ஏற்பாட்டில், நடைபெற்றது,

நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் அறிவானந்தம் மாவட்ட பொருளாளர் விஜய் தியாகு, பு.சுறா ரவி பங்கேற்று 500 பொது மக்களுக்கு முழு கரும்புடன், பொங்கல் தொகுப்பு பை, மற்றும் புடவை வழங்கி சிறப்பித்தனர்,

உடன் நிகழ்ச்சியில், பொழிச்சலூர் பகுதி தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள்,

மகளிர் அணியினர் தகவல் தொழில் நுட்ப அணி, மற்றும் வட்ட நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ் சினிமா நடிகர்கள் சங்கம் மற்றும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல்



மதுரை ஜன 14

மதுரை உத்தங்குடி பகுதியில் உள்ள ரோஜாவனம் முதியோர் இல்லத்தில், தமிழ் சினிமா நடிகர்கள் சங்கம் மற்றும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் தலைவர் ஸ்டார் குரு தலைமையில், வழக்கறிஞர் முத்துக்குமார் முன்னிலையில் பொங்கல் வைத்து சமத்துவ பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மதுரை காவல்துறை குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் ஜஸ்டின்பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் ரோஜாவனம் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு ஸ்டார் குரு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தமிழ் சினிமா நடிகர் சங்கத்தின் உள்ள நடிகர், நடிகைகள் வினோத், நட் சத்திர நண்பர்கள் அறக் கட்டளை உறுப்பினர்கள் என பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



மதுரை உத்தங்குடியில் மாநகராட்சி சார்பாக அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் மதுரை கிழக்கு, மதுரை வடக்கு, திருப்பரங்குன்றம், மற்றும் மதுரை தெற்கு அகிய சட்டமன்ற தொகுதிகளில் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் , மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., , நகராட்சி நிருவாக இயக்குநர் சிவராசு, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மதுரை சூர்யா நகரில் ஜெயபாரத் ஹோம்ஸின் புதிய டிவின் டவர் குடியிருப்புகள் துவக்கவிழா




மதுரை,ஜன.14

மதுரைசூர்யா நகரில் ஜெயபாரத் ஹோம்ஸ் நிறுவனத்தின் புதிய டிவின் டவர் அடுக்குமாடி குடியிருப் புக்கள் துவக்க விழா கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஜெயபாரத் ஹோம்ஸ் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார்,நிர்மலா தேவி ஜெயக்குமார், ஹன்சிகா, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். இதற்கு முன்னதாக டைட்டன் சிட்டி, எலைட் சிட்டி என தனித்தனி குடியிருப்பு தொகுப்பு வீடுகள் 12 ஏக்கரில் கட்டப்படுகிறது. தற்போது 70 நவீன அடுக்குமாடி குடியிருப்புகளுடன், 30 நவீன வசதிகள் அடங்கிய கட்டுமானம் துவங்கி உள்ளது.

தலைமை நிர்வாகி ஜெயக்குமார் கூறுகையில் "இரண்டு டவர்களுடன் அமைவதால் 'டிவின் டவர்' என இக்குடியிருப்பிற்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது. டிவின் டவரில் 40 அடியில் குடிநீர் மற்றும் பள்ளிகள், மருத்துவமனைகள், ஷாப்பிங் மால் அருகில் உள்ளன.

வீடு வாங்கும் ஒவ் வொருவருக்கும் சமையல்அறையில் மாடுலர் கிச் சன்', ரூம்களில் 'வாட் ரூப்' அமைத்து தரப்படும். துபாய், இங்கிலாந்தில் இருப்பது போல அதி நவீன வசதிகளும், சிறந்த முகப்பு தோற்றங்களுடன் அமைகிறது" என்றார். துவக்கவிழாவில் வாடிக்கையாளர்கள் 20 நபர்களுக்கு மேல் முன்பதிவு செய்தனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. மதுரை மக்களின் கனவு இல்லத்தை பூர்த்தி செய்யும் வகையில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் கட்டிடத்தில் உறுதி தன்மையும் கூடிய ஜெயபாரத் ஹோஸின் டிவின் டவர் விளங்குவதாக முன்பதிவு செய்த வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டத்திற்குட்பட்ட கீழடியில் சுற்றுலாத்துறை மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பில் பொங்கல் விழா



சிவகங்கை,ஜன.14

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டத்திற்குட்பட்ட கீழடியில் சுற்றுலாத்துறை மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகம் முழுவதும் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகள் ஆகியவைகளை வழங்க உத்தரவிட்டதன் அடிப்படையில், தமிழக முழுவதும் அப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழாவினை முன்னிட்டு, மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, திருப்புவனம் வட்டத்திற்குட்ப் பட்ட உலக புகழ் பெற்ற கீழடியில் சுற்றுலாத்துறை மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்து நடத்திய பொங்கல் விழா இன்றைய தினம் சிறப்பாக நடைபெற்று வருகி றது. தமிழர்களின் புகழை பறை சாற்றுகின்ற வகையில் பல்வேறு நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், வீரவிளையாட்டுகள் ஆகியவைகளுடன் சிறப்பாக நடைபெறும் இவ்விழாவில், அமெரிக்கா, இஸ்ரேல், பிரேசில் மற்றும் ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் (Reunion) ஆகிய நாடுகளைச் சார்ந்த 28 வெளிநாட்டு சுற்றுலாப் பயணியர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்துள்ளது பெருமைக் குரிய ஒன்றாகும்.

மேலும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணியர்களை, நமது மாவட்டத்தின் பல்வேறு வரலாற்று சிறப்பு அம்சங்களை அறிந்து கொள்ளும் வகையில், அவற்றை காண்பிக்கும் வண்ணமும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டுள்ள ஊர் பொதுமக்கள் அனைவருக்கும், கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுள்ளவர்களுக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,தெரிவித்தார்.

முன்னதாக, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் மூலம் சிவகங்கை பையூர் பிள்ளை வயல் பகுதியிலுள்ள அரசினர் குழந்தைகள் இல்லத்தில், குழந்தைகள் இல்லங்களிடையிலான நடைபெற்ற விழிப்புணர்வு கலை விழா மற்றும் பொங்கல் விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்று சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மாவட்ட சமூக நல அலுவலர் ரதிதேவி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் துரை, மாவட்ட சுற்றுலா அலுவலர் திருவாசன், திருப்புவனம் வட்டாட்சியர் விஜயகுமார், முன்னாள் கீழடி ஊராட்சி மன்றத்தலைவர் வெங்கடசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், ஊர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் முன்னாள் எம்.பி. எ.ஜி.எஸ்.ராம்பாபு நினைவு தினம்



மதுரை, ஜன.14

மதுரை நாடாளுமன்ற தொகுதியின் முன்னாள் எம்.பி. எ.ஜி.எஸ்.ராம்பாபு மூன்றாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கபட்டது.

மதுரைமஹால் வடம் போகி தெருவில் உள்ள அவரது இல்லத்தில் மலர்களால் அலங்கரிக்கபட்ட திருஉருவ படத்திற்கு மதுரை நகர் மாவட்ட தலைவர்கள்ராஜாங்கம். நடராஜ ன். துரைப் பாண்டி. முன்னிலையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.கே. ராஜேந்திரன் மாநில செயற்குழு கோபிபாபு.சச்சின்ஹரேஸ்பாபு .சிவசுந்தரம்.மீனாசெல்வராஜ். கரிமேடுமணி.மைதீன்பாட்சா. சீனிவாச ன். பைர வமூர்த்தி. அசோக்குமார். துரை நாக ராஜன், சந்திரன். அவனியாபுரம் ராமசாமி .கண்ணன். ரமேஷ்பாபு. ராமர். ஒத்தக் கடை ஜெயபிரகாஷ். பிரேம் குமார். பைக்காரமணி. பாண்டியராஜன்.மற்றும் சர்வ கட்சி முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலித்தினர்.இந்த விழாவில் நலிவடைந்தோர்க்கு சேலை. வேஷ்டி. ஆட்டோ டிரைவர்களுக்கு சிருடைகள் வழங்கபட்டன. இவ்விழாவினை ஜெக நாதன், சங்கர். பாண்டியராஜன். ஆகியோர் செய்திருந்தனர்.



இராமநாதபுரத்தில் ரூ.4.44 கோடி மதிப்பீட்டில் இரண்டு தளங்கள் கொண்ட புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,குத்துவிளக்கேற்றி வைத்தார். அதனைத்தொடா;ந்து இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினா; காதர்பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து அனைவரும் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக கட்டடத்தின் உட்கட்டமைப்புகளை பார்வையிட்டனர்.




கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், சிறாவயல் கிராமத்தில், பொங்கல் திருநாளையொட்டி, நடைபெற உள்ள மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,தலைமையில், இன்று (12.01.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161